VAALIPAN MINISTRIES SRI LANKA

# வாலிபன்
# VAALIPAN

வாலிபர்களுக்கான மாதாந்த சஞ்சிகை

இதழ் - 82 | வாலிபர்களுக்கான மாதாந்த சஞ்சிகை | புரட்டாதி - 2014





**"... தன் வழிகளைத் தன் தேவனாகிய கர்த்தருக்கு முன்பாக நேராக்கினதால் பலப்பட்டான்."**

**2 நாளாகமம் 27:6**








Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வாலிபன்
VAALIPAN
வாலிபர்களுக்கான மாதாந்த சஞ்சிகை

## கிறிஸ்துவுக்குள் அன்பான வாலிபன் வாசகர்களுக்கு,

உலக ஜோதியாம் இயேசு ராஜாவின் நாமத்தில் வாழ்த்துக்கள்

இம்மாதம் மெதடிஸ்த திருச்சபை வாலிபர்களுக்கு இடையான மென்பந்து சுற்றுப்போட்டிகளில் கலந்து சிறப்பித்த அனைத்துக் குழுக்களுக்கும், வெற்றிக்கிண்ணத்தைத் தட்டிச் சென்ற மண்டூர் மிஷன் அணியினருக்கும் பாராட்டுக்களையும், நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றோம். குறிப்பாக, இந்நிகழ்வுகளில் பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பித்த மெதடிஸ்த திருச்சபையின் வடக்குக் கிழக்கு சபா சங்கத் தலைவர் அருட்திரு. S. D. தயாசீலன் போதகர் அவர்களுக்கும், அருட்திரு ஞானரூபன், சாம்சுபேந்திரன், அவர்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மேலும் கிறிஸ்துவுக்குள் மறைந்த சகோ இரத்தினம் டானியல் புஸ்பராஜா – நற்செய்திப் பணிப்பாளர் அவர்களுக்கு அஞ்சலியையும், குடும்பத்தாருக்கும், சபையினருக்கும் ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

மேலும் கிறிஸ்துவின் வருகை சமீபித்து வருவதினாலும் அடையாளங்கள் நிறைவேறுவதினாலும், சத்துருவானவனின் எதிர்ப்பு அதிகமாகப் பெருகி வருகிறது. விசுவாசிகள் துன்புறுத்தப்படுவதும் பிரிவினைகள் தூண்டப்படுவதும் கண்கூடாகக் காணமுடிகின்றது.

சிலவேளைகளில் துன்பங்கள் எம்மை வருத்த ஆரம்பிக்காவிட்டாலும் மற்றவர்கள் கிறிஸ்துவுக்காய் துன்பம் அனுபவித்ததைக் கண்டும் காணாதவர்களாய் இருப்போமேயானால் ஒரு நாள் நாமும் அவ்வேதனைகளுக்கூடாய் போகவேண்டிய நேரம் வரும்போது நிர்க்கதிக்குள்ளாக நேரிடும். ஆகவே, தேவ பிள்ளைகளே ஜெபிக்க ஒருமனப்படுவோமாக!

தேசங்களுக்காகவும், பட்டணங்களுக்காகவும் சபைகளுக்காகவும் திறப்பின் வாசலில் நிற்க முன்வருவோமாக!

**கிறிஸ்துவின் பணியில்**
**ஆசிரியர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஜோன் வெஸ்லி

**கனம் ஜோன் வெஸ்லி ஐயரின் வாழ்க்கைச் சரிதம் தொடர் நிகழ்வாய்.... 52**

**சகோ. இராஜநாயகம் சுரேந்திரன்**

இங்கிலாந்தின் 'எவ்வோராத்' நகரில் ஆரம்பித்த அபிஷேகத்தின் ஊழியம் அதற்குப் பிற்பாடு நிற்கவேயில்லை. மகாபெரிய மகிமை பொருந்தியதாகக் காணப்பட்டது. சரித்திர ஆய்வாளரான 'நின்ஆதர்' என்ற மனிதர் இவர்பற்றிக் குறிப்பிடும்போது "ஜோன்வெஸ்லி அவர்கள் தெருவில் நடந்து செல்லும்போது மக்கள் தத்தமது தொப்பிகளைக் கழற்றி மரியாதை செய்தனர். ஒரு ராஜாவினைப் பார்க்கும்போது எப்படிப் பயம் கலந்த பார்வையோடு மரியாதை செய்வார்களோ அப்படியாகப் பார்ப்பார்கள்" என எழுதிவைத்துள்ளார்.

ஊழியப் பாதையில் ஒருபுறம் முதுமையின் சாயல்கள் முகத்தினில் கோடுகள் போட்டாலும், பிரசங்க மேடைகளிலோ ஒரு சிங்கத்தைப்போன்ற தொனியில் அளவாக வந்து வார்த்தைகள் விழும். இங்கிலாந்தின் வரலாற்றிலேயே இவை போன்ற காரியங்கள் நிகழவில்லை என மக்கள் மனதுக்குள் பேசிக்கொள்ள ஆரம்பித்தனர். கனம் ஜோன்வெஸ்லி அவர்கள் மக்களிடையே நடைபோட்டுச்செல்லும்போது மக்கள் அவரை "இங்கிலாந்தின் அப்போஸ்தலன்" என மரியாதையோடும், மகிழ்ச்சியோடும் அழைக்க ஆரம்பித்தனர். கனம் பெற்ற பிரபுக்களுக்கு கிடைக்கும் மகாசெல்வாக்கு, புகழ் என்பனவற்றை கர்த்தர் இத் தேவமனிதனுக்கு வழங்க ஆரம்பித்தார். ஊழியத்தின் ஆரம்ப நாட்களில் இங்கிலாந்தின் புகழ்பெற்ற பல பெரிய தேவாலயங்கள் வெஸ்லி ஐயருக்கு கதவடைப்பையும், எதிர்ப்பையும் ஏராளமாகக் காட்டின. ஆனால் இப்பொழுதோ அம் மாபெரிய ஆலயங்களின் முன்பக்கக் கதவுகள் யாவும் அகலமாகத் திறந்து கொள்ள ஆரம்பித்தன.

எந்த ஆலயங்களில் அவர் பிரசங்கிக்கக் கூடாது என்று தடுத்தார்களோ அதே ஆலயங்களிலே பிரசங்கிக்க இப்போது ஆவலோடு அழைத்தார்கள். ஆரம்பத்தில் இரக்கமற்ற முறையில் அவதுறு பேசி, தூஷித்துக் கொண்டு திரிந்த மக்களின் முதன்மை ஸ்தானம் பெற்ற குருமார்கள், இப்பொழுதோ இவர் வந்து எம்முடைய ஆலயத்திலே பேசமாட்டாரா என்று வாஞ்சையோடு எதிர்பார்த்தார்கள். அவர் பிரசங்கிக்க வந்தாலோ அது அக்குருமார்களுக்கு எல்லையில்லா மகிழ்வைக் கொடுப்பதாயிருந்தது.

முன்னரெல்லாம் வெஸ்லி ஐயரின் பெயரையே வெறுத்த பேராயர்கள் தற்போதோ அவருடைய எல்லை கடந்த ஞானம் நிறைந்த வார்த்தைகளைக் கேட்பதற்காக மறைமுகமாக அவருடைய கூட்டங்களுக்கு செல்ல ஆரம்பித்தார்கள். சென்று வந்த பேராயர்களும் போதகர்களும் "இது எப்படிப்பட்ட ஞானம், இதற்கு நிகராக நின்றுபிடிக்க முடியாமல் உள்ளதே" எனத் தமக்குள் அறிக்கையிட்டனர். யாவையும் விட மேலாக, வயது செல்லச்செல்ல ஜோன்வெஸ்லி அவர்களுடைய முகரூபமானது அதிக பிரகாசம் கொண்டு விளங்குவதை


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பேராயர்கள் போதகர்கள் தமக்குள் உணர்ந்து மிகுந்த ஆச்சரியமடைந்தனர்.

இதற்கு மிகச்சிறந்த ஆதாரமாக இந்தியாவின் தமிழ் நாட்டைச்சேர்ந்த பிலபல இறையியல் வரலாற்று ஆசிரியரான திருவாளர் S.டானியேல் அவர்கள், ஜோன்வெஸ்லி அவர்களின் ஆச்சரியமிகு தேக சுகம் பற்றி பின்வருமாறு விபரிக்கிறார். "ஜுன் 28ம் திகதி அவருடைய எண்பத்தோராவது பிறந்ததினம் வந்தது. அவர் தனது நண்பர்களிடம், நான் நாற்பது ஆண்டுகளுக்கு முன்பு எவ்வளவு திடகாத்திரமாக உணர்ந்தேனோ அதே பெலத்தையும், மனஉறுதியையும் இந்த எண்பத்தோராம் ஆண்டு வயதிலும் உடையவனாக இருக்கிறேன். அக்காலத்தில் நான் எந்த வேலையையும் செய்து முடிக்கச் சித்தமாயிருந்தேனோ, தற்போதும் இந்த வயதிலும் எந்தவேலையையும் செய்து முடிக்க என்னால் முடிகிறது. இதனை நான் சர்வவல்லமையுள்ள தேவனுடைய சுத்தக் கிருபையென்றே சொல்லுவேன்."

ஆம்! "என்னைப்பெலப்படுத்துகின்ற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்ய எனக்குப்பெலமுண்டு" (பிலிப் 4:13) என்ற வார்த்தைகளில் நிதர்சனம் அவர் வாழ்க்கையில் பரிபூரணமாகப் புலப்பட்டது. நாற்பது வயதின் ஆரோக்கியத்தைக் காட்டிலும் இப்போது அவர் ஆரோக்கியமாகச் செயற்பட்டார். வாலிப நாட்களில் எப்பொழுதாவது தலைவலியோ அல்லது பல்வலியோ மற்ற சரீரப் பெலவீனங்களோ அவரைத் தாக்கும். ஆனால் ஆச்சரியமிகு காரியம் என்னவெனில், வயதான காலத்திலோ ஒரு சிறு நோய்தானும் இந்த வயதான வாலிபரை அணுகவேயில்லை. அதுமட்டும் அல்ல! ஊழியப்பெருக்கம் அதிசயத்தக்க வகையிலே வளர்ச்சியடைய ஆரம்பித்தது. ஊழியத்துறையில் தடம்பதித்து நாற்பது ஆண்டுகள் கடந்தன. ஒரு கடுகு விதையைப்போன்று ஆரம்பித்த கிறிஸ்துவின் பணி சொல்லி முடியாத அளவிற்கு படிமுறை வளர்ச்சி கண்டது. இப்பணிகள் இங்கிலாந்து, அயர்லாந்து சுற்றிலும் உள்ள தீவுகள் என வளர்ச்சியைக் கண்டது. அங்கிருந்து எல்லை கடந்து கனடாவிலும் அமெரிக்காவிலும் கால்பதித்தது. மெதடிஸ்த திருச்சபையாரின் அடிப்படைக் கொள்கை எதுவெனில், **பரிசுத்தமான வாழ்க்கையை நடத்துவதும், திருமறையின் வார்த்தைகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பதுமாகும்.**

அருட்திரு.ஜோன்வெஸ்லி அவர்களுக்கு எண்பத்திரெண்டு வயது பூர்த்தியடையும் காலம் நெருங்கியது. கர்த்தரால் கூடாத காரியம் ஏதாகிலும் உண்டோ எனச் சொல்லும் அளவிற்கு அவருடைய ஆரோக்கியம் காப்பாற்றப்பட்டது. சரீரத்திலே களைப்பென்பதே அவருக்குக் கிடையாது. நீண்ட நேரம் பிரசங்கித்துக் கொண்டேயிருப்பார். அவரால் நன்றாக நடக்க முடிந்தது. மனதின் சக்திகள் எல்லாம் நன்றாகக் கிரியை செய்தன. இவ்வாறு தான் காப்பாற்றப்படுவது கர்த்தருடைய நித்திய கிருபையென அடிக்கடி அவர் சொல்வதுண்டு. இத்தேவனுடைய மனுஷனின் எண்பத்தைந்தாவது பிறந்தநாள் வந்தது. கர்த்தர் அவரை ஏராளமான ஆவிக்குரிய ஆசீர்வாதங்களோடும் சரீரப்பிரகாரமான ஆசீர்வாதங்களோடும் நிரப்பியிருந்தார்.

ஜோன்வெஸ்லி அவர்கள் சமுதாயத்தைப் பாதிக்கின்ற தீங்குகளோடு போரிட்டார். 1772ம் ஆண்டு காலப்பகுதிகளில் "அடிமைத்தனம்" என்பதான கொடியசொல் இந்த உலகினை மிகக்கொடுமையாக ஆட்டுவித்துக் கொண்டிருந்தது. அக்கால நாட்களில் நிலவிய இந்த அடிமைத்தன செயற்பாடுகள் கனவில் கூட நினைத்துப்பார்க்கமுடியாத அளவிற்குக் கொடூரங்களை வழங்கிக் கொண்டிருந்தது. வனவிலங்குகளை எப்படியாக மனிதர்கள் இறைச்சிக்காக வேட்டையாடித் தம் உணவுத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வார்களோ அவ்வண்ணமாகவே அடிமைத்தனத் தேவைகளுக்காக இந்த அப்பாவிக் கறுப்பின மக்கள் வேட்டையாடப்பட்டனர்.

**வெஸ்லி மீண்டும் வருவார்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- தொகுப்பு - சுதன்

# சுவடுகளைத் தேடி



**நா**ளை உங்கள் பிள்ளைகள் இந்தக் கற்கள் ஏதென்று தங்கள் பிதாக்களை கேட்கும் போது, நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு அறிவிக்கவேண்டியது என்னவென்றால்:
**இஸ்ரவேலர் வெட்டாந்தரை வழியாய் இந்த யோர்தானைக் கடந்துவந்தார்கள். பூமியின் சகல ஜனங்களும் கர்த்தருடைய கரம் பலத்ததென்று அறியும் படிக்கும், நீங்கள் சகல நாளும் உங்கள் தேவனாகிய கர்த்தருக்குப் பயப்படும் படிக்கும்... (யோசுவா 4:21-23)**


கர்த்தருடைய வழிநடத்தல்களை பின்வருகின்ற சந்ததிக்கு ஞாபகக்குறியாக அறிவிக்கவேண்டியது எமது பொறுப்பாகும். அத்தோடு மாறப்படுகின்ற திருப்பணி வழிமுறைகளில் தற்கால ஓட்டத்துக்கு அமைவாக புனருத்தாரணமும், மீள்கட்டுமானமும் இடம்பெற கைசேர்க்க வேண்டியதும் காலத்தின் தேவையாகும். ஆகவே சிறுதொடராக சுவடுகளை தேட முனைகின்றோம். தங்களது விமர்சனங்களும், ஜெபங்களும், ஆக்கபூர்வமான பங்களிப்பும் சுவடுகள் பயன்தரும் ஞாபகக்குறியாக மாற வலுச்சேர்க்கும். அந்தவகையில் முதலாவதாக சமூக மறுமலர்ச்சியின் களமாக அமைந்த ஜீவோதயம் தொடர்பான வரலாற்று குறிப்பினைப் பார்ப்போம்..

ஜீவோதயம், சமூச மறுமலர்ச்சியினையையும் சமூகத்தின் மீதான பொறுப்பினையும், கரிசினையையும் இலக்காக கொண்டு உருவான ஒரு பணித்தளம். 1964ம் ஆண்டிலே இறையழைப்புப் பெற்று திருப்பணிக்கு தன்னை அர்ப்பணித்த கிழக்கிலங்கையின் மைந்தன் 1967 இலே அருட்பொழிவுபெற்று மன்னார்-முருங்கன்னில் காலபதித்தார். இம்மண்ணிலே தனது அழைப்பின் தனித்துவத்தை கண்ட அம்மைந்தனின் மனதில் எழுந்ததும், இப்பிரதேச மக்கள்மேல் கொண்ட கரிசனையின் பிரதிபலிப்பே ஜீவோதயம் எனும் பெரியளவிலான ஓர் விவசாயத்திட்டம். ஆம், அம் மைந்தனே இன்றும் இம்மண்ணில் ஊறிப்போன சமூக விடுதலையின் தியாக வித்து அருட்பணி ஜோர்ஜ். N.ஜெயராஜசிங்கம் தன்னுடைய திருச்சபை திருப்பணி கடமைகள் மத்தியிலே குருமனை வளாகத்திலே தன் உழைப்பினால் உதயமாகி பெரும் பலன் கொடுத்த சின்னஞ்சிறு தோட்டமே இவரின் மனதில் எழுந்த பெரியளவிலான விவசாய திட்டத்தின் அத்திவாரமாகும்.

விவசாயத்திற்கென ஏதுவாக அமைந்த முருங்கன் பகுதியும், அன்னாரின் உள்ளத்தின் வாஞ்சைக்கு தோள் கொடுக்க முன்வந்த அன்றைய திருச்சபை வாலிபர்களும் அடியவரின் கனவை நனவாக்க அடிகோலியவை. 1974ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 26ம் திகதி ரூபா 50,000 முற்கடனுடன் அரசிடமிருந்து கிடைக்கப்பெற்ற 50 ஏக்கர் காணியில் 10 ஏக்கர் நிலத்தினை பண்படுத்தி அன்றைய சமுதாயத்தின் வாழ்வாதாரமாக ஜீவோதயம் பண்ணையை ஆரம்பித்தார். அன்னாரின் கைகளை பலப்படுத்தி இரத்தத்தை வேர்வையாக்கிய பலர் இன்று மறைந்துவிட்டாலும் சிலர் இன்னும் உயிர்சாட்சிகளாக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்கின்றனர். 1980ம் ஆண்டு திருப்பேரவை அன்னாரின் திட்டத்தினையும் அதன் முன்னேற்றத்தினையும் அங்கீகரித்து ஜீவோதயத்தை இலங்கை மெதடிஸ்த திருச் சபையின் ஓர் முன்னோடி விவசாயத்திட்டமாக ஏற்றுக் கொண்டது. ஐந்து வருடங்க ளுக்கு இப்பணிக்கென அன்னார் பிரத்தியேகப்படுத்தப்பட்டு பண்ணையின் முகாமையா ளராகவும் திருப்பணியாளராகவும் நியமிக்கப்பட்டார்.




அடியவரினதும், அவரது கரங்களைப்பலப்படுத்திய அன்றைய இளைஞர்களினதும் அயராத உழைப்பின் விளைவாக 1980க்கிடையில் 40 ஏக்கர் காணியில் பருவகால பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டது. 10 ஏக்கரில் செய்யப்பட்ட நெற்செய்கையிலும் 15 ஏக்கரில் மேற்கொள்ளப்பட்ட தென்னைசெய்கையிலும் வருடாவருடம் உற்பத்தியில் அதிகரிப்பு காணப்பட்டது. இவ்வதிகரிப்புக்கு, பண்ணையை அண்டியமைந்த அருவியாற்றிலிருந்து குடங்களில் நீர் எடுத்து தோள்களில் சுமந்து வந்து உரமூட்டினர் அன்றைய இளைஞர்கள்.

திட்டத்தின் முன்னேற்றமானது காற்றினால் நீர் இறைக்கும் தொழில்நுட்ப வளர்ச்சியையும் கண்டது. பயிர்ச்செய்கை மாத்திரமின்றி மாடு, கோழி, பன்றி வளர்ப்பு எனும் வளர்ச்சிப்படியினையும் அடைந்தது. விவசாய திட்டம் மாத்திரமின்றி சமூக கரிசனையின் வெளிப்பாடாக ஜீவோதயத்தை அண்டிய பகுதிகளில் பண்ணையில் வேலை செய்தோருக்கென அமைத்துக்கொடுக்கப்பட்ட ஜீவநகர் எனும் வீடமைப்புத்திட்டம், மற்றும் தொழிற்பயிற்சிகள், சிறுவர் பகல் பராமரிப்பு நிலையம் போன்றவையும் அடியவரின் திருப்பணியின் அங்கங்களாயின. சமூகத்தின் மீதான தமது பொறுப்பினையும், கடவுள் தனக்கு கொடுத்த கடமையினையும் நன்குணர்ந்த அடிகளார் அன்றைய தமிழ் மக்கள் மீதான அடக்குமுறைக்கும் அநியாய பழிவாங்கல்களுக்கும் எதிராக தனது இறைவாக்குபணியை துணிச்சலுடன் செய்தார். அதன் விளைவாக 1984.12.13 அன்று மன்னாரை அண்டிய முள்ளிப்பள்ளம் என்னும் இடத்தில் திட்டமிடப்பட்ட முறையில் அவரது வாகனத்தில் வைத்து சுடப்பட்டு அவ்வாகனத்தோடே எரிக்கப்பட்டு, அன்னாரின் உடல் அழிக்கப்பட்டது. (இவ் சம்பவத்தில் வாகன சாரதியான இஸ்லாம் சகோதரனும் பலியானமை குறிப்பிடத்தக்கது)

தனது பணியில் தன்னோடிருந்த தன்னை தாங்கிய அன்பு மனைவி மரித்த பண்ணையிலே தன்னருகிலே அடக்கம் செய்யப்பட்ட நினைவிடத்திலேயே அன்னாரின எரிந்து மீந்த உடலும் அடக்கம் செய்யப்பட்டது.

- சுவடுகளில் ஜீவோதம் தொடரும் -

உதவி – 40வது ஆண்டுவிழா கையேடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவீரன் அலெக்ஸாண்டர்



மாவீரன் அலெக்ஸாண்டர் எல்லா நாடுகளையும் கைப்பற்றி விட்டு தாய்நாடு திரும்பும் வழியில் நோய்வாய்ப்பட்டார். பல மாதங்கள் ஆகியும் அவருக்கு அந்த நோய் தீரவில்லை. சாவு தன்னை நெருங்குவதை உணர்ந்தார் அவர்.

ஒருநாள் தனது தலைமை வீரர்களை அழைத்து, "என்னுடைய சாவு நெருங்கிவிட்டது" எனக்கு 3 ஆசைகள் உள்ளன. அவற்றை நீங்கள் கண்டிப்பாக நிறைவேற்றி வைக்கவேண்டும்" என கட்டளையிட்டார்.

அவர்களும் அவற்றை நிறைவேற்றுவதாக வாக்களித்தனர். முதல் விருப்பமாக, "என்னுடைய சவப்பெட்டியை எனக்கு சிகிச்சையளித்த மருத்துவர்கள் மட்டுமே தூக்கி வரவேண்டும்.

இரண்டாவது, "என்னைப் புதைக்கும் இடத்திற்குச் செல்லும் வழியானது நான் சம்பாதித்து வைத்த, விலைமதிப்பற்ற கற்களால் அலங்காரம் செய்யப்படவேண்டும்".

மூன்றாவதாக, "என் கைகள் இரண்டையும் சவப்பெட்டிக்கு வெளியில் தெரியுமாறு வைக்கவேண்டும்.

வீரர்களுக்கு ஆசைகள் வித்தியாசமாகத் தெரிந்தன. என்ன காரணமாக இருக்கும் எனக் கேட்கப்பயந்தனர். அதில் ஒருவன் தைரியமாக முன்வந்து, "அரசே! நாங்கள் தங்கள் ஆசையை கண்டிப்பாக நிறைவேற்றுகின்றோம். ஆனால், இதற்கான காரணத்தை தாங்கள் எங்களுக்கு விளக்கவேண்டும் எனக் கேட்க,

அலெக்ஸாண்டர் அதற்கு விளக்கமளித்தார்.

1. என்னுடைய சவப்பெட்டியை மருத்துவர்கள் தூக்கிச் செல்வதால், உலகில் உள்ள எல்லோரும் ஒரு விஷயத்தை அறிந்து கொள்வார்கள். மருத்துவர்களால் எந்த ஒரு நோயிலிருந்தும் ஒரு உயிரை நிரந்தரமாகக் காப்பாற்ற முடியாது. மரணத்தை அவர்களால் நிறுத்த முடியாது. மரணம் ஒரு நிதர்சனமான உண்மை.

2. வாழ்க்கையில் எவ்வளவு பணமும், நாடுகளும், மிக செல்வங்களும் சம்பாதித்தாலும், அவற்றை யாரும் தன்னுடன் எடுத்துச் செல்ல முடியாது. அது சவக்குழிவரை மட்டுந்தான்....! மனிதர்கள் வீணாக சொத்துக்கள், செல்வங்கள் போன்றவற்றின் பின்னால் செல்ல வேண்டாம் என்பதைத் தெரியப்படுத்துவதற்காக!

3.உலகையே வென்றவன் இந்த மாவீரன் அலெக்ஸான்டர் சாகும்போது கைகளில் ஒன்றுமில்லாதவனாகத்தான் இருக்கிறான் என்று அறிந்து கொள்வதற்காக.

ஆம் நண்பர்களே, அநித்தியமான இவ்வுலகை விட்டு நித்தியமான கடவுளை நோக்கியே எமது பயணம் செல்கின்றது.

தொகுப்பு– சாள்ஸ் சஞ்சே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர். சகோ. இரத்தினம் டானியேல் புஸ்பராஜா




இலங்கை மெதடிஸ்த திருச்சபையில் நற்செய்திப் பணியாளராக பணி செய்த சகோ. புஸ்பராஜா அவர்கள் 12.9.2014 அன்று காலமானார். இவர் மூதூர் பாட்டாளிபுரம் பகுதிகளில் ஊழியம் செய்ததுடன் கல்குடா நற்செய்திப்பண கல்லூரியில் பயின்றும் வந்தார்.

இரு கண்களும் பார்வையற்றவராக இருந்த போதும் சிறந்த பாடகராகவும், சுவிஷேஷகனாகவும் கர்த்தருக்காய் தீங்கனுபவிக்கிரவராக வாழ்ந்து வந்தார். இவரது வாழ்வு பலருக்கு சவாலாக அமைந்திருந்தது. 5 வயது மகனையும், கண்பார்வை குறையுடன் வாழும் மனைவியையும் விட்டுப்பிரிந்துள்ள இவ்வூழியனை நினைப்பதும் இவரது குடும்பத்தைத் தாங்குவதும் விசுவாசிகளாகிய நம் ஒவ்வொருவருடைய தார்மீகக் கடமையாகும். இக்குடும்பத்தை ஆதரிக்க விரும்புகிறவர்கள் தயவாய்த் தொடர்பு கொள்ளவும்.

– ஆசிரியர் –

## வாலிபன் ஊழியம் வாழைச்சேனை மெதடிஸ்த திருச்சபை சந்திப்பு
### 21 புரட்டாதி 2014







வாலிபன் ஊழியத்தினை அறிமுகப்படுத்தவென 21ம் திகதி புரட்டாதி 2014 வாழைச்சேனை மெதடிஸ்த திருச்சபைக்கு சென்றிருந்தோம். அன்று ஞாயிறு ஆராதனையில் கலந்து கொண்டதுடன் வாலிபன் ஊழியங்கள் பற்றிய சிறு அறிமுகத்தையும் மேற்கொள்ள கர்த்தர் கிருபையளித்தார்.

வாழைச்சேனை திருச்சபையின் ஞாயிறு ஆராதனை காலை 7.30 மணிக்கும் சுங்கன்கேணி ஆராதனை 9.00 மணிக்கும் அதே ஆலயத்தில் நடைபெற்று வருகின்றது. வாலிபன் சஞ்சிகை தேவைப்படுவோர் எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

– கரோலினா –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதிமானாகிய யோபு

அவர் என்னைக் கொன்று போட்டாலும் அவர்மேல் நம்பிக்கையாயிருப்பேன் (யோபு 13:15)

நம் வாழ்வில் துன்பங்கள், வியாதிகள் வரும்போதும், துக்கத்தால் நம் தலையணை நனைந்து கண்ணீர் விட்டு கதறும்போதும், எந்த வழியும் தெரியாமல் தத்தளிக்கும்போதும் நமக்காக ஜெபிக்க வருகிறவர்கள் யோபுவை எடுத்துக்காட்டாக காட்டி ஜெபித்திருப்பதை நாம் சொல்ல முடியும். நமது உறவினர்களோ, நண்பர்களோ இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் இருக்கும் மற்றவர்களுக்காக நாம் ஜெபிக்கும் போது யோபுவை நாமும் எடுத்துக்காட்டி ஆறுதல் கூறியிருக்கிறோம்.

யோபுவின் பொறுமையையும், தேவனுடைய ஆச்சரியமான கிருபைகளையும் சத்துருவின் போராட்டத்தைக் குறித்தும் நாம் யோபுவின் புத்தகத்தில் வாசிக்கும்போது நமக்கு அது அநேக உண்மைகளை எடுத்துக் காட்டுகின்றது. அவை நம் வாழ்விற்கும் பிரயோஜனமாயிருக்கும்.

யோபு புத்தகம் வேதாகமத்தின் மையப்பகுதியில் இருந்தாலும், வேதாகம நூல்களிலேயே மிகவும் பழைமையான புத்தகமாகும். யோபு ஆண்டவரை தொழுது கொள்ளும் விதம் ஆபிரகாம் காலத்தை சேர்ந்ததாக உள்ளது. ஆகவே இவர் ஆபிரகாமிக்கும், மோசேயின் காலத்திற்கும் இடையில் வாழ்ந்திருக்கலாம் என வேத வல்லுனர்கள் கருதுகின்றனர்.

மிகவும் நீதிமானாகிய ஒரு மனிதன் அனுபவிக்கும் மிகக்கடினமான வேதனைகள்தான் இந்த நூலின் மையக்கருத்தாகும். தேவன் நமக்கு உபத்திரவத்தை அனுப்புவதன் நோக்கம், நம்மை நொறுக்குவதற்கல்ல. நம்மை ஊன்றக்கட்டவே, நம்மைக் கீழே தள்ளுவதற்கல்ல, நம்மை உயர்த்துவதற்குமே என்ற உண்மையை கூறுவதாக யோபு புத்தகம் காணப்படுகிறது. நமது வாழ்க்கையில் நடக்கும் ஒவ்வொரு சம்பவத்திற்கும், ஒவ்வொரு கஷ்டத்திற்கும் ஏன் என்று தேவனிடம் கேட்பது முறையல்ல என்பதையும் தேவன் சகலத்தையும் செய்ய வல்லவர், அதிகாரம் உடையவர், அவர் செய்ய நினைத்ததை யாராலும் தடை செய்ய முடியாது என்பதும் இந்த புத்தகத்தின் மூலம் நாம் அறிந்து கொள்ளும் சத்தியமாகும்.

யோபுவின் வாழ்விலிருந்து நாம் முதலாவதாக கற்றுக் கொள்ள வேண்டிய காரியம் என்னவென்றால், யோபுவுக்கு வந்த உபத்திரவங்கள், துன்பங்களுக்கு காரணம் யோபுவுக்கு தெரியாது. ஆனால் ஆவியானவர் தேவனுக்கும் சாத்தானுக்கும் இடையில் நடந்த உரையாடலை நமக்கு எழுதி வைத்துள்ளார். யோபுவோ அதை அறியவில்லை. தேவன் கடைசிவரை அதை அவருக்கு தெரிவிக்கவுமில்லை.

ஆனால் நமது ஒவ்வொரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துன்பங்களுக்கும் காரணத்தை எல்லா நேரங்களிலும் தேவன் நமக்கு தெரிவிப்பதில்லை. அதை அறிந்து கொள்ள வேண்டிய அவசியமும் நமக்கு இல்லை. தான் நீதிமானாயிருந்தும், தனக்கு வந்த துன்பங்களுக்கு காரணம் என்ன என்று தெரியாதிருந்தும் தன் நாவினால் பதறி எந்த வார்த்தையையும் பேசி தேவனை தூசியாமல் தன்னைக் காத்துக் கொண்டார் யோபு. இவரைப்போல நம் பாடுகளில் பொறுமையாய் இருக்கக் கற்றுக் கொள்வோம்.

இரண்டாவதாக, யோபுவின் நண்பர்கள் அவரை உண்மையாக நேசித்தவர்கள்தான். அவர்களுக்கிருந்த ஒரு குறை, தேவனைப்பற்றியும், அவரது வழிகளைப் பற்றியும் அவர்களுக்கிருந்த அறிவு குறைவே ஆகும். அக்குறைவின் நிமித்தமாக யோபுவின் பாடுகளின் காரணம் அறியாதவர்களாய் யோபுவின் மேலேயே எல்லாக் குற்றத்தையும் சுமத்தி, அவரைக்

**தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க**

# கிரான் கிறிஸ்தவ சேவா ஆச்சிரமத்தின் 56வது ஆண்டு நிறைவு விழா





கிரான் கிறிஸ்தவ சேவா ஆச்சிரமத்தின் 56வது ஆண்டு நிறைவு விழா புரட்டாதி மாதம் 12, 13, 14ம் திகதிகளில் நடைபெற்றது.

பெருந்திரளான அடியார்கள் நிகழ்வுகளிலும் ஆராதனைகளிலும் வேதப்படிப்பு களிலும் கலந்து கொண்டமை சிறப்பம்சமாகும். விஷேஷமாக இவ்விழா நிகழ்வுகளில் சபைபாகுபாடு இன்றி பல்வேறு திருச்சபைகளிலிருந்து ஊழியர்களும், விசுவாசிகளும் கலந்து ஐக்கியத்தில் ஈடுபடுவதும், ஒருவரையொருவர் ஏற்று நடப்பதும், பொறுப்புக்களை பகிர்ந்து கொள்வதும் பாராட்டப்பட வேண்டிய, பின்பற்ற வேண்டிய காரியமாகும். இவ் ஐக்கியமானது காலத்தின் கட்டாயமாகும். இன்று சபைகள் சிதறடிக்கப்படுவதற்கும் அழிவதற்கும் காரணம் ஐக்கியம் இன்மையே!

முதலாவது நாள் நிகழ்வில் பிரதம பேச்சாளராக இலங்கைத் திருச்சபையின் குருமுதல்வர் அருட்பணி S.P. நேசகுமார் கலந்து சிறப்பித்தார். இரண்டாவது நாள் நிகழ்வில் DEAFLINK இயக்குனர் அருட்திரு. S.S.ஞானராஜா கலந்து சிறப்பித்தார். இவ் ஆச்சிரம ஊழியங்கள் வளரவும், பெருகவும் அனேகர் கர்த்தராகிய இயேசுவை அறியவும் தயவாய் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

**வாலிபன் ஊழியங்களுக்காக,**

**- ஓவியா -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈசாவின் வேர் அவர் தான்

பூவுலகில் வந்துதித்தார்
புண்ணியனாம் இயேசு ராஜன்
புத்துலகம்தான் சமைத்து
பொற்காலம்தான் படைக்க
கொட்டிலில் வந்துதித்த
கோமகன் பிறப்பை இன்று
கொண்டாடும் பூவுலகில்
கோடி ஜனம் மனம்குளிரும்

அன்னவர் பிறந்த காலம்
அருண்டதோர் இருண்டகாலம்
இஸ்ரவேல் ஜனங்களுக்கு
இடுக்கண் நிறை கடுங்காலம்
மத்திய கிழக்கெங்கும்
மாயவனின் பேரரசு
ஏரோது அரசனென்பான்
ஏகமாய் ஆண்டுவந்தான்
விடுதலை வேட்கையால்
வேதியரும் ஏங்கி நின்றார்

இடையர்கள் வயலில் தங்கி
இரவினில் காத்திருக்க
விண்ணிலே பேரொளி
வெகுவாக ஒளிமிளிர
வான்சேனை திரள் கூட்டம்
வந்து நிற்கும் காட்சி கண்டார்
அஞ்சி நடுங்குகின்றார்
அவ்விரவில் இடையர்களும்

அஞ்சாதீர் மகிழ்ச்சி கொள்வீர்!
அரியாணை அலங்கரிக்க
அரசனாய் பிறந்து இங்கே
ஆண்டவர் வந்துதித்தார்

தேடினீர் மேசியாவை
தேற்றவே உலகில் வந்தார்
ஈடேற்றி விடுவிக்கும்
ஈசாயின் வேர் அவர்தான்
தீவன தொட்டியிலே
திருக்குழந்தை காண்பீர்கள்

என்றுரைத்த வான்சேனை
ஏகமாய் மறைந்து விட்டார்

மேலோக செய்தியினால்
மெய்சிலிர்த்த இடையர்களும்
நள்ளிரவில் தேடிவந்தார்
நடுவானின் வெள்ளியோடும்
சத்திரத்தில் கூட்டம்
சந்தடிகள் மெத்தவுண்டு
வான் வெள்ளி வழிகாட்ட
வந்தடைந்தார் புலலணைக்கு
கீழ்வான சாஸ்திரியும்
கிளர்ந்து வந்து ஒன்றிணைந்தார்

தீர்க்கர்கள் உரைத்த வார்த்தை
திட்டமாய் நிறைவு கண்டார்
தளராத பெருமகிழ்வில்
தரிசித்தார் கோமகனை


கோமகன் மாம்சமாகி
கோவேறு கழுதையேறி
ஆதாமின் பாதகத்தை
அகற்றவே சிலுவை தாங்கி

தம் உயிர் தந்து எம்மை
தயவோடு கிட்டிச்சேர்க்க
பார் போற்றும் வேந்தனாகி
பரிகாரம் தேடிதந்தார்

அன்னவர் வந்துதித்து
ஆசிகள் தந்த நாளை
தாசராய் கூடி நாங்கள்
தரணிக்கே எடுத்துரைப்போம்

சகோ:- ஈஸ்டர் வெறல்டு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




01. யூதாவும் அவனுடைய சகோதரனும் இணைந்து இவனின் கால் விரல்களைத் தறித்துப் போட்டனர்.

02. சவுலுக்குப் பயந்து தாவீது இந்த ராஜாவுடன் இருந்தான். (திரும்பியுள்ளது.)

03. சவுலின் உடலை இந்த அலங்கத்தில் தூக்கில் போட்டார்கள். (குழம்பியுள்ளது)

04. யோனா தர்ஷீசுக்குப் போகின்ற கப்பலை இந்த ஊரில் கண்டான். (குழம்பியுள்ளது)

05. இந்த மிருகம் ஏறிப்போனால் நெகேமியா கட்டும் அலங்கம் இடிந்து போகும் எனக் கூறினார்கள்.

06. இந்த அரசனின் காலத்தில் நேபுகாத் நேச்சர் எருசலேமை முற்றுகையிட்டான். (குழம்பியுள்ளது, இறுதி எழுத்து இல்லை)

07. நெகேமியா அலங்கத்தைக் கட்டத் தேவையான மரங்களை இவனிடமிருந்து பெற அனுமதி பெற்றான்.

08. ஈசாக்கின் மாமனார். (குழம்பியுள்ளது)

02. யோபுவின் ஊர். (குழம்பியுள்ளது)

07. பாபிலோனின் ஞானிகளைக் கொலை செய்யும்படி ராஜா இவனுக்கு கட்டளை பிறப்பித்தான்.

09. நெகேமியாவின் சகோதரன். (தலைகீழாயுள்ளது)

10. மீகாவின் காலத்தில் ஆட்சி செய்த இராஜாக்களில் ஒருவன். (குழம்பியுள்ளது, முதல் எழுத்து இல்லை)

11. யோவான் சபைகளுக்கு கடிதங்களை எழுதியபோது அதை ஏற்றுக்கொள்ளாதவன் (குழம்பியுள்ளது)

12. யூதாவின் சகோதரன். (குழம்பியுள்ளது)

13. கர்த்தருடைய ஆலயத்திற்கு சாலமோன் அஸ்திபாரம் இட்ட மாதம்.

தபால் மூலம் இச்சஞ்சிகையை பெறவிரும்புவோர் தயவாய் எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

- ஆசிரியர் -



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## 78ற்கான விடைகள்

### இடமிருந்து வலம்

1. (லசூமிதித்) - சூலமித்தி
2. நூன்
3. (றுஎபும்) - எறும்பு
4. (த்தாபில்) பில்தாத்
5. (பன்) - ரூபன்
6. (ப்எஸ்லிபா) - எலிப்பாஸ்
7. மனது
8. (இர) - இரவு

### மேலிருந்து கீழ்

2. (நூற்றுப்பத்) - நூற்றுப்பத்து
9. சூசான்
10. (புப்லிபி) - பிலிப்பு
11. (திறப்) - திறப்பு
12. (ன் லாபா) - லாபான்
13. (கஸ்புத) - புஸ்தகம்
14. (ம்னஇ) - இனம்
15. (துர) - துரவு

**குறுக்கெழுத்துப் போட்டி 78 ற்கான வெற்றியாளர்**

S.J.நிவ்ஷயாணி
பாணமைபற்று
கோமாரி

**இப் போட்டியில் வெற்றி பெறுபவர் ஒரு வருடத்திற்கான இவ்இதழைத் தொடர்ந்து பெறுவார்**

**குறுக்கெழுத்துப் போட்டி 80ற்கான விடைகளை அனுப்ப வேண்டிய கடைசித் திகதி**
**20.10.2014**

**அனுப்ப வேண்டிய முகவரி**

ஆசிரியர்,
குறுக்கெழுத்துப் போட்டி இல. 80,
"வாலிபன்"
கோட்டைமுனை மெதடிஸ்த ஆலயம்,
மட்டக்களப்பு.



## சிறுவர்களுக்கான வினாவிடை போட்டி இல.: 73

1. எத்தனை நாட்கள் புளித்த மா காணப்பட கூடாது என கர்த்தர் கூறினார்?
2. ஆரோனின் சகோதரி மிரியாம் கடவுளை துதிக்க எடுத்துக் கொண்ட வாத்தியம் எது?
3. சூர் வனாந்தரத்திலே எத்தனை நாட்கள் தண்ணீர் இல்லாமல் இஸ்ரவேலர் இருந்தனர்?
4. மோசே சீனாய் மலையில் எதன் ஊடாக கர்த்தரிடம் ஏறிப் போனான்?
5. எவற்றினால் தெய்வங்களை உண்டாக்க வேண்டாம் என கர்த்தர் இஸ்ரவேலரிடம் கூறினார்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வினா விடைப் போட்டி 71 ற்கான விடைகள்

1. ஈட்டி, தண்ணீர்ச்சொம்பு
2. நாபால்
3. 70 மூப்பர்கள்
4. யாபேசு
5. 40 நாட்கள்

இப் போட்டியில் வெற்றி பெறுபவர் அழகிய புத்தகம் ஒன்றை பரிசாகப் பெறுவர்

வினா விடைப் போட்டி 73ற்கான விடைகளை அனுப்ப வேண்டிய கடைசித் திகதி

**20.10.2014**

### அனுப்ப வேண்டிய முகவரி

**ஆசிரியர்**
**வினா விடைப் போட்டி இல.73,**
**"வாலிபன்"**
**கோட்டைமுனை மெதடிஸ்த ஆலயம்,**
**மட்டக்களப்பு.**

16 வயதிற்குட்பட்டவர்களாய் இருத்தல் வேண்டும். ஞாயிறு பாடசாலை அதிபர்/ஆசிரியரின் கையொப்பத்துடன் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் போன்றவை தெளிவாய் எழுதப்பட்டிருக்க வேண்டும்.

### 71இற்கான வெற்றியாளர்

ச.கோபிகா
தேற்றாத்தீவு – 02

## நீதிமானாகி யோபு – 7ம் பக்க தொடர்ச்சி...

காயப்படுத்தினார்கள். அதில் நாம் கற்றுக் கொள்ள வேண்டிய விடயம், நம்மோடு இருக்கும் நண்பர்கள், விசுவாசிகள், உறவினர்கள் யாருக்காவது வியாதிகள், போராட்டங்கள் வரும்போது, இவர் என்ன பாவம் செய்தாரோ, அதனால்தான் இதை அனுபவிக்கிறார் என்று நினைக்கவோ குற்றப்படுத்தவோ கூடாது.

துன்பத்திலும் பாடுகளின் மத்தியிலும் இருக்கிற ஒருவருக்கு ஆறுதலை கொடுக்கும் வார்த்தைகளை பேசி, ஜெபிக்க வேண்டுமே தவிர யோபுவின் நண்பர்களைப் போல அவர்கள் மேல் குற்றத்தைச் சுமத்தி, புண்படுத்தக் கூடாது.

அந்த வியாதியோ, பாடுகளோ எதனால் வந்தது என்று தேவன் மாத்திரமே அறிவார். ஆகவே நாம் நம் வார்த்தைகளில் கவனமாக இருக்க வேண்டும். ஒருவேளை அவர்களுடைய பாவத்தினிமித்தம் துன்பம் வந்திருந்தாலும் அவர்கள் தேவனோடு ஒப்புரவாகிக் கொள்ளட்டும். நாம் அவர்களை குற்றப்படுத்த வேதம் நம்மை அனுமதிக்கிறதில்லை.

பிரியமானவர்களே, சில நேரங்களில் நமது வாழ்வில் வரும் பாடுகளின் காரணத்தை நம்மால் புரிந்து கொள்ள முடிவதில்லை. ஆனால் உலகத்திலே உங்களுக்கு உபத்திரவம் உண்டு. ஆனாலும் திடன் கொள்ளுங்கள். நான் உலகத்தை ஜெயித்தேன் என்று சொன்ன இயேசுகிறிஸ்து நம்மோடு இருக்கும் போது எந்த உபத்தரவத்தையும் நாம் துணிவோடு எதிர்கொள்ள முடியும். உலகத்தை ஜெயித்த நம் இயேசு நமக்கு அனுமதித்திருந்தாலும், நாம் அவருக்கு உண்மையாக இருக்கும்போது, அவற்றினின்று நம்மை விடுவித்து காத்துக் கொள்ள அவர் உண்மையுள்ளவராக இருக்கிறார். ஆமென் அல்லேலூயா!

சகோதரன் எனிட். தொகுப்பு : இணையம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




– ஜீவந்தி அக்கா –

# பழிவாங்கல்

ஒரு ஊரில் சுசி என்ற ஒரு சிறுமி இருந்தாள். அந்த ஊரில் உள்ள பிரபல்யமான ஒரு பாடசாலையில் தரம் 8இல் கல்வி கற்றுக்கொண்டிருந்தாள். அவளுக்கு சீதா. ராணி என்று இரு நண்பிகள் இருந்தார்கள். மூவரும் மிக நெருங்கிய நண்பர்களாக அவர்களது வகுப்பில் இருந்தனர்.

ஒரு நாள் ராணி பாடசாலைக்கு ஆசிரியர் கொடுத்த வீட்டுவேலை செய்ய மறந்து சென்றுவிட்டாள். ஆசிரியர் அன்று செய்து வராதவர்களை வெளியே அனுப்புவார் என்ற பயத்தில் இன்னொரு மாணவியினை பார்த்து எழுதினாள்" என்று ஆசிரியரிடம் ராணியைப் பற்றி கோள் கூறினாள். ஆசிரியர் ராணியிடம் "சீதா சொல்வது உண்மையா?" என்று கேட்டார். அதற்கு ராணியும் ஆம் என்று ஒத்துக்கொண்டு வகுப்பை விட்டு வெளியேறினாள். அதன் பின்பு சீதா ராணியுடன் சுசியுடனும் கதைப்பதை நிறுத்திவிட்டாள்.

அந்த மாத இறுதியில் அவர்களது வகுப்பில் மாதாந்த பரீட்சை நடைபெற்றது. அந்த பரீட்சையின்போது சீதா இன்னொரு மாணவியிடம் கேட்டு எழுதினாள். இதனை ராணியும் சுசியும் பார்த்து விட்டனர். சுசி ராணியிடம் பரீட்சை முடிந்தவுடன் இன்று செய்ததை ஆசிரியரிடம் போய் சொல்லுவோம் என்றாள். ஆனால் ராணி "என்னால் முடியாது" என்று சொல்லி விட்டாள். சுசி "அன்று சீதா உன்னை ஆசிரியரிடம் போட்டுக் கொடுத்தாள் தானே! அதை நீ மறந்து விட்டாயா?" என்று கேட்டாள். அதற்கு ராணி "நாமும் அதை செய்தால் பழிவாங்குவது போன்று இருக்கும். அந்த சம்பவம் நடந்து முடிந்த உடனே நான் அவளை மன்னித்து விட்டேன். இந்த நிமிடம் வரை நான் அவளை நண்பியாக தான் பார்க்கின்றேன்."



என்றாள். இதனை அவ்வழியாக வந்த சீதா கேட்டாள். அவள் அழுது கொண்டு ராணியிடம் ஓடிச் சென்று என்னை மன்னிப்பாயா? எனது நண்பியாக சேர்ப்பாயா? என்று கேட்டாள். ராணி "நீ எப்பொழுதும் எனது நண்பி தான்" என்று அவளை அணைத்து அவளின் கண்ணீரை துடைத்து விட்டாள்.

என் அன்பு தம்பி தங்கைகளே! நீதிமொழிகள் 24:29இல் **"அவன் எனக்குச் செய்த பிரகாரம் நானும் அவனுக்குச் செய்வேன். அவன் செய்கைக்குத்தக்கதாக நானும் அவனுக்குச் சரிக்கட்டுவேன். என்று நீ சொல்லாதே"** என்று எழுதி உள்ளது. இன்று நாம் சுசி போன்று யோசிக்கின்றோமா? அல்லது ராணி போன்று அவர்களை மன்னிக்கின்றோமா. இயேசப்பா நம்மை மன்னிக்கும்படி தான் சொல்லி இருக்கின்றார். ஆகவே நாமும் இயேசப்பாவின் வழியில் நடப்போம்.

**ஜெபம்:**

**அன்புள்ள இயேசப்பா, நானும் சுசி போன்று நடந்தமைக்கு மன்னிப்பு கேட்கின்றேன். இன்றில் இருந்து நீங்க சொன்ன பாதையில் நடக்க உதவி செய்யுங்க. ஆமென்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# VAALIPAN CRICKET FIESTA 2014

*ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள்.*

மெதடிஸ்த சபைகளுக்கிடையிலான வாலிபர்களின் ஐக்கியத்தை வலுப்படுத்தும் முகமாக, புரட்டாதி மாதம் 6,7ம் திகதிகளில் மட்டக்களப்பில் வாலிபன் ஊழியங்களினால் மென்பந்து கிரிக்கட் சுற்றுப்போட்டி ஒன்று நடாத்தப்பட்டது. திருகோணமலை முதல் கோமாரி வரை 12 அணிகள் இச்சுற்றுப்போட்டியில் பங்குபற்றின. அணிக்கு 6 பேர் விளையாடும் போட்டியாக நடைபெற்றது. வாலிபர்கள் மிகவும் உற்சாகத்துடனும் சகோதரத்துவத்துடனும் போட்டிகளில் பங்குபற்றினர்.

முதல் நாள் நிகழ்வு அருட்திரு ஞானரூபன் போதகரின் ஆரம்ப ஜெபத்துடன் ஆரம்பமானது. முதல் போட்டிகள் லீக் ஆட்டமாக நடைபெற்றது. வாலிபர்கள் தங்களின் திறமைகளை சிறப்பாக வெளிக்காட்டினர். அன்றைய நாள் இரவு வேளையில் வருகை தந்திருந்த வாலிபர்களுக்கு பாசறைத்தீ ஒன்றுகூடலும் இடம்பெற்றது. இரண்டாம் நாள் நிகழ்வில் கால் இறுதி, அரையிறுதி ஆட்டங்கள் நடைபெற்றன. முதல் அரையிறுதியில் மண்டூர் மிஷன் அணியினர் வெற்றி பெற்றனர். இரண்டாம் அரையிறுதியில் சின்ன ஊரணி மெதடிஸ்த வாலிபர்களும், திருகோணமலை வாலிபர்களுக்குமிடையான போட்டியில் சின்ன ஊறணி அணியினரும் வெற்றி பெற்று இறுதிப்போட்டிக்கு தெரிவாகினர்.

இறுதிப் போட்டிக்கு வடகிழக்கு சபாசங்கத்தலைவர் அருட்திரு S.D.தயாசீலன் போதகர் அவர்கள் பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்தார். இறுதிப்போட்டி மண்டூர் மிஷன் அணியினருக்கும் சின்னஊரணி அணியினருக்கும் இடையில் மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்றது. இறுதியில் மண்டூர் மிஷன் அணியினர் 3 விக்கட்டுக்களால் வெற்றி பெற்று 2014ம் ஆண்டுக்கான கிண்ணத்தை சுவிகரித்துக் கொண்டனர். தொடரின் சிறப்பாட்டக்காரராக சின்ன ஊரணி அணியைச் சேர்ந்த ராஜ் தெரிவாகினார். இறுதி ஜெபத்துடனும் ஆசீர்வாதத்துடனும் போட்டிகள் நிறைவுபெற்றன. கலந்து சிறப்பித்த ஒவ்வொரு அணியினருக்கும் வாலிபன் குடும்பம் சார்பாக நன்றிகளைத் தெரிவிக்கின்றோம். ஜெபத்தில் தாங்கிய அனைத்து உள்ளங்களுக்கும் வாலிபன் குடும்பத்தின் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக.

கலந்துகொண்ட அணிகள் : திருகோணமலை A,B,C,D / கிரான் A,B / அமிர்தகழி / சின்னஊரணி/ நாவற்குடா/ மண்டூர்மிஷன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







வாலிபன்
VAALIPAN
வாலிபர்களுக்கான மாதாந்த சஞ்சிகை

VAALIPAN MINISTRIES
SRI LANKA

கடிதத் தொடர்புகளுக்கு:

ஆசிரியர்,
" வாலிபன் " சஞ்சிகை,
மெதடிஸ்த ஆலயம், கோட்டைமுனை,
மட்டக்களப்பு, இலங்கை.

vaalipankyf@gmail.com

http://www.vaalipan.com/

/VAALIPAN/ /Vaalipan_kyf

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வணசிங்கா பிரிண்டர்ஸ், திருமலை வீதி, மட்டக்களப்பு. 065 222 7170